ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஆஸ்திகர்களே!

நாம் தினந்தோருமனுஷ்டித்துவரும் காரியங்களெல்லாம் தர்மமாகவும், நியாயமாகவும் இருக்கவேண்டும். கெட்டகாரியங்களைக் கூடியமட்டும் விலக்கிவிட முயற்சிக்கவேண்டும். சாஸ்திரமூலமாகத்தான் நல்ல காரியங்களையும், கெட்டகாரியங்களையும் நாம் உணறலாம். நாமாகத்தெரிந்து கொள்ளமுடியாது. சாஸ்திரங்களில் ஸூரியனுதிப்பதற்குமுன் விழித்துக்கொள்வது தர்மமென்றும் அப்படி விழித்துக்கொள்ளாவிட்டால் பாபமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அத்தகையவனிடத்தில் லக்ஷ்மிதேவியும் நீண்டகாலம் தங்கி நிற்கமாட்டாள். தற்காலத்தில் நமது பரதகண்டமனைத்தும் வியாதியாலும் வறுமையாலும் துன்பப்படுவதற்குக் காரணமுமிதுவேயாகும். பிராணிகளுக்குத் தூக்கம் இயற்கையாயினும் அதையும் அனவரதம் அளவுக்குமிஞ்சி ஸேவிப்பது கெடுதிதான். அடிக்கடி தூங்கிக்கொண்டிருப்பவனுக்கு காரியாகாரிய விவேகம் ஏற்படமாட்டாது. காரியங்களைப் பகுத்தறியமுடியாத காரணத்தால்தான் அனர்த்தங்களனேகம் நாம் அனுபவித்துவருகிறோம். அக்ஞானமென்னுமிருள் விலகுவதற்கு இவ்வுலகவிருளை விலக்கவேண்டும். உலகில் ஞானத்தையடைய முயற்சியாதவனுக்கு ஸுகம் கொஞ்சம்கூட ஏற்படாது. ஞானத்தால் ஸுகமும், அக்ஞானத்தால் துக்கமுமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமல்லவா? மனிதனாக ஜனித்தவர்கள் பணத்தைப் பாடுபட்டுத் தேடிக்கொள்வதுபோல் ஞானக்களஞ்சியத்தையும் கைப்பற்றிக்கொள்ள வேண்டும். கண், காது முதலிய ஞானேந்திரியங்களில்லாதவன் எவ்வளவு அழகுள்ளவனாகவிருப்பினும் குருடனும், செவிடனும்தானன்றோ! ஆகாரத்திலோ, வ்யவஹாரத்திலோ, உத்யோகமுறையிலோ, தேசியவிஷயங்களிலோ, மற்றும் நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் அதனதன் தத்வஞானத்துடன் பிரவர்த்தித்தவர்களுக்கு ஸுகமும், கௌரவமும், லாகவமும் அதிகம்தான் என்பதில் ஸந்தேகமில்லை. தத்வஞானிகள் நிரம்பவிருக்கும் தேசத்துக்கும் கௌரவமதிகம். ஆகவே வெடியற்காலையில் விழித்துக்கொள்பவனுக்கு தத்வஞானமதிகரிக்கும். வெடியற்காலையில் மனம் சுத்தமாயிருக்குமாதலால் அவ்வேளையில் செய்யப்படும் காரியங்களுக்கு அதிகப் பயனுண்டு. இச்சிறுகாரியத்தையும் நம்மையனுஷ்டிக்குமாறு மகரிஷிகள் தர்மசாஸ்திர கிரந்தங்களில் வற்புறுத்தியிருப்பதைப் பார்க்கும்போது தயாநிதிகள் மகரிஷிகள் என்று புலப்படுகின்றதல்லவா? மகரிஷிவம்சத்திலுதித்த நம்மவர்களின் ப்ரத்யுபகாரத்தையும், ஸ்தோத்திரத்தையும் எதிர்பார்த்து மகரிஷிகள் ஷை காரியங்களை நமக்கு விதிக்கவில்லை. அவர்கள் நம்மைப்போல் க்யாதி, பூஜா, லாப, பரர்கள் அன்று. அவர்கள் எல்லா விஷயத்திலும் நம்மைவிட மேலானவர்களே; ஆகையால் மகரிஷிகளிடத்தில் மகத்வபுத்தியை வைத்து அவர்கள் தயவாக உபதேசித்தருளிய நல்ல காரியங்களை பிரயோஜநமற்றவை என்று விட்டுவிடாமல் கூடியமட்டும் அனுஷ்டித்து தம்மையும், தேசத்தையுமுயர்த்துவோமாக.

சுபம். பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
விபவ-௵ மாசி-மீ ௧௰௨

# இந்திரியாத்மவாதி மதவிசாரம்.

ஸ்தூலதேகத்தை ஆத்மாவாகக்கருதும் சார்வாகரின் மதம் சென்ற வாரத்தில் நிரூபிக்கப்பட்டது. இந்த வாரத்தில் இந்திரியங்களைத் தனியாகவும், சேர்ந்தும் ஆத்மாவென அங்கீகரிப்பவர்களின் மதத்தை விசாரிப்போம். மரித்தவனுக்கு ஞானமில்லையாதலின் தேகத்தையே ஆத்மாவாக எப்படிக்கூறுவது? “நான் பார்க்கிறேன்” என்று அனுபவம் சக்ஷுரிந்திரியத்தை ஆத்மாவாக நிரூபிக்கின்றது. நமக்கு காது முதலிய இந்திரியங்களாலேற்படும் ஸுகத்தைக்காட்டிலும் சக்ஷுரிந்திரியத்தால் ஸுகத்தையனுபவிப்பது அதிகம். இதனால்தான் “सर्वेन्द्रियाणां नयनं प्रधानं” என்று நமது முன்னோர்களும் கூறுவார்கள். மற்ற இந்திரியங்களைக்காட்டிலும் சக்ஷுரிந்திரியம் சிரேஷ்டமுமானதால் அதுதான் ஆத்மாவாம். குருடனுக்குக்கண்ணில்லாததால் காது தான் ஆத்மாவாம். “த்வக்” முதலிய இந்திரியங்களைக்காட்டிலும் இதிலிருந்து ஸுகமதிகமுண்டாகும். இவ்விரு இந்திரியங்களுமில்லாவிடின் த்வகிந்திரியம் ஆத்மாவாம். இது இல்லாவிடின் நாவு ஆத்மாவாம்; நாக்கில்லாதவனுக்கு மூக்கு ஆத்மாவாம்; இவ்விதம் ஐந்து இந்திரியங்களையுமாத்மாவாக ஒப்புக்கொள்பவர்களும் சிலர் உண்டு. சுருதிகளில் இந்திரியங்கள் ஒன்றுக்கொன்று தம், தம் பெருமைக்காக பரஸ்பரம் ஸம்வாதம் செய்துகொண்டதாகக் காணப்படுவதால் இந்திரியங்களுக்கும் சைதன்யம் உண்டெனஏற்படுகிறது. ஆதலால் இந்திரியங்களே ஆத்மாவாம் என்று இந்திரியாத்மவாதிமதம். இதுவும் ஸரியானதன்று. இந்திரியங்களில் ஒவ்வொன்றையும் ஆத்மாவென்று சொல்லமுடியாது. ஏனெனின் நேத்திரேந்திரியமல்லாமல் குருடனும் சுரோத்திரமில்லாமல் செவிடனும், வாக்கில்லாமல் ஊமையனும் ஜீவிக்கிறானல்லவா? இந்திரி

யங்களும் அதின் காரியங்களும் இன்றியும் சரீரம் நிலைபெறுவதில்லையா? நான் பார்க்கிறேன், நான் கேட்கிறேன் என்னும் அநுபவத்தாலும் இந்திரியங்களினும் வேறாகவே ஆத்மா இருப்பதாக ஸித்திக்கின்றதேதவிர இந்திரியங்கள் ஆத்மாவென இவ்வநுபவம் ஸாதிக்கச் சக்தியற்றது. எப்படியெனின் நேத்திரஸ்வரூபனாகிய நான் பார்க்கிறேன், சுரோத்ரஸ்வரூபனாகிய நான் கேட்கிறேன் என அறிவுண்டாமாயின் நேத்திராதிரூபந்தான் ஆத்மாவென்று ஸித்திக்கும். அப்படிக்கின்றி நேத்திரத்தால் நான் பார்க்கிறேன், சுரோத்திரத்தால் நான் கேட்கிறேன் என்றுமறிவுண்டாவதால் இந்திரியங்களிலும் ஆத்மா வேறென்றுதான் ஏற்படும். தவிர, சுஷுப்திகாலத்தில் இந்திரியங்களில்லாவிடினும் ஜீவநம் கண்டிருப்பதால் இந்திரியங்களை ஆத்மாவாக எப்படிக்கூறுவது? தவிர, இந்திரியாத்மவாதிமதத்தில் ஒரு தேகத்தில் அனேகாத்மாவையொப்புக்கொள்ளவேண்டிவரும். அப்படியாயின் அவ்வனேகாத்மாக்களுள் அபிப்பிராயபேதமும் பரஸ்பரம் சண்டைகளும் உண்டாகுமன்றோ? எப்படி அனேக அரசர்கள் ஒரு தேசத்துக்கு இருக்கும்பக்ஷத்தில் அரசர்களுள் அபிப்பிராயபேதம் ஏற்படுவது அநுபவஸித்தமோ அவ்விதமேதான் சரீரத்திலும் அனேகாத்மாக்களிருந்தால் விஷயத்தில் பிரவர்த்தி ஸம்பவியாது. இதனால் தேகத்திற்கு நாசம்தான் ஸம்பவிக்கும்.

உலகத்தில் மாளிகை, ஆலயம் முதலிய பெருங்காரியங்களை நாநாஜீவர்கள் ஒற்றுமையுடன் செய்வதுபோல் குறித்த விஷயப் பிரவர்த்தியையும் அனேக இந்திரியங்கள் ஒற்றுமையுடன் செய்ய முடியாதோவெனின் தேவாலயம் முதலிய காரியங்கள் முடிவுபெறும்வரையில் யாவருமொற்றுமையுடன் இருப்பார்கள் என்ற நியமம் சொல்லமுடியாது. ஒருக்கால் பரஸ்பரம் அபிப்பிராயபேதமுமேற்படலாம், பிரிவும் அவர்களுக்கு ஸம்பவிக்கலாம். அங்ஙனமே அவ்விந்திரியங்களுக்கும் பரஸ்பரம் அபிப்பிராயபேதம், பிரிவு இவை ஏற்படுவது நிச்சயம்தான். ஆகவே அவை ஆத்மாவன்று. தவிர இந்திரியாத்மவாதிமதத்தில் நேத்திரத்தால் பார்க்கப்பட்ட பதார்த்தங்களை வாகிந்திரியத்தால் வ்யவஹரிக்கவும் முடியாது, ஏனெனின் பதார்த்தங்களைக்கண்டது கண்களன்றோ அவைகளை உச்சரிப்பது வாகிந்திரியமன்றோ? இவர்கள் மதத்தில் கண்டவனும் சொல்பவனும் வெவ்வேறன்றோ? ஒருவன் கண்ட

வஸ்துவை மற்றொருவன் வ்யவஹரிக்க எப்படி இயலும்? இந்திரியங்களை ஆத்மாவாக ஒப்புக்கொண்டால் இவ்வுலகில் அநேக வ்யவஹாரங்களுக்கு லோபம் ஏற்பட்டுவிடும். ஆகவே இந்திரியங்களை ஆத்மாவாக ஒப்புவது ஸரியன்று. இந்திரியஸமுதாயத்தையுமாத்மாவாகக்கூறுவது பொருந்தாது. ஏனெனின் இந்திரியஸமுதாயத்தில் யாதானுமொரு இந்திரியம் நசித்துவிடுவுமாயின் அவ்விந்திரியஸமுதாயமும் நசித்துவிடும். ஆத்மா நாசமற்றதென்ற ஸித்தாந்தம் சீர்குலையும்; அதையுந்தவிர, அந்தனும் செவிடனும் மரித்தவனாக ஒப்பவேண்டி வரும். அங்ஙனம் காணப்படுவதில்லை. அன்றியும் அவ்விந்திரியஸமுதாயமென்பது பிரத்தியேகத்தைக்காட்டிலும் வேறா? அன்றா? வேறென்றால் ஸமுதாயம் ஆத்மாவென்று ஸித்தித்ததேயன்றி இந்திரியங்களுக்கு ஆத்மதத்வம் ஸித்திக்கவில்லையே, ஆகவே தன் ஸித்தாந்தத்திற்கு ஹாநி. இரண்டாவது பக்ஷத்தையங்கீகரிக்கின் இந்திரியங்கள் ஒவ்வொன்றுக்கும் கூறின தோஷம் ஸம்பவிக்கும். இந்திரியங்கள் பரஸ்பரம் ஸம்பாஷித்துக்கொண்டதாக சுருதிகளுக்கு அர்த்தமில்லை. இவ்வுலகில் ஸமஸ்த ஜடவஸ்துக்களுக்கும் அதிஷ்டான தேவதையுண்டு. அவ்விதமே இந்திரியங்களுக்கும் அதிஷ்டான தேவதைகளுண்டு. அதிஷ்டானதேவதையின் அநுக்ரஹத்தால் தான் அவ்விந்திரியங்களுக்கு தம் தம் விஷயங்களில் ஸாமர்த்தியம் ஏற்படும், இன்றேலேற்படாது. அவ்விந்திரியங்களின் அபிமானி தேவதைகளோ சேதனங்களே? ஆகையால் இந்திரியங்களை ஆத்மாவாகச் சொல்வது தவறு. இதுகாறும் இந்திரியாத்மவாதி மதத்தை நிரூபித்துக் கண்டித்துப் பேசினோம். இனி பிராணாத்மவாதி மதத்தைப் பரிசீலனம் பண்ணுவோம்.

ஹிரண்யகர்ப்போபாஸகர்கள் பிராணனை ஆத்மாவென்பர். எதனாலெனின் ஒருவருக்கு மரணஸமயத்தில் மூர்ச்சை எப்போதுண்டாகின்றதோ அப்போது அப்புருஷனுடைய புத்திராதிகள் பிராணசேஷமிருந்தால் ஜீவித்திருப்பதாகவும் அஃதில்லையாயின் மரணமடைந்தாரென்றுமறிகின்றனர். அன்றியும் ஸுஷுப்தி காலத்திலும் பிராணனுடைய இருப்பினால் ஜீவனவ்யவஹாரம் உண்டாகின்றதாதலின் சரீரத்தினின்றும் பிராணவியோகத்தையே மரணமென்று சொல்லுவதாலும் ஜீவனமரணங்கள் பிராணனுடைய அதீனமே' என்று ஏற்படுவதால் பிராணனே ஆத்மா

வாம். வேதத்திலும் பிராணனே ஆத்மாவாகச்சொல்லிபிருக்கிறது. அதாவது ஒரு ஸமயத்தில் இந்திரியங்களுக்கும் முக்கிய பிராணனுக்கும் தம், தம் பெருமையைக்குறித்து ஸம்வாதமேற்பட்டது. இப்படி ஸம்வாதம் பண்ணிக்கொண்டு பிரும்மாவின் அருகில் சென்று தம், தம் கக்ஷிகளையுறைத்தன. அதைக்கேட்ட பிரும்மாவும் நீங்களொவ்வருவரும் சரீரத்தில் நுழைந்து வெளிப்படுங்கள். எந்த வஸ்துவின் வெளிப்படுதலால் இத்தேகம் அமங்கலமாக இருக்குமோ அதுதான் உங்களுக்குள் சிரேஷ்டமாமென்று சொல்ல அதை அங்கீகரித்து அவ்விந்திரியங்களும் பிராணனும் தேகத்தில் ஒவ்வொன்ருக பிரவேசித்து வெளியாயிற்று நேத்திரம் முதலிய இந்திரியங்கள் வெளிப்பட்டும் தேகம் ஜீவித்திருந்தது. எப்போது பிராணன் தேகத்தினின்றும் வெளியாயிற்ரே, அப்போது இத்தேகம் அமங்கலமாகிவிட்டது. அதன் பின்னர் “मातेव पुत्रान्रक्षस्व” இந்திரியங்களனைத்தும் முக்கியப்பிராணனைத் துதித்தன. அக்காலத்தில் பிராணன் அவ்விந்திரியங்களை நோக்கி நீங்கள் வீணில் கலகம் செய்யாதீர்கள். நானே ஐந்துவகையாக இருந்துகொண்டு இச்சரீரத்தை நிலைக்கச்செய்கிறேன் என்றது. இவற்ருல் பிராணனே ஆத்மாவென்பது வேதஸம்மதமென்பதும் எற்படுகின்றதல்லவா?

இந்த பிராணாத்மவாதிமதமும் நலமுடையதன்று. பிராணனென்பது சரீரத்தில் ஸஞ்சரிக்கும் வாயு, ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் வாயு ஜடமாவதுபோல் சரீரத்தில் ஸஞ்சரிக்கும் இப்பிராணவாயுவும் ஜடமேயாகும். ஆகவே கடம் முதலியவைபோல் பிராணனும் அனாத்மாவாம் முக்கியப் பிராணனையும் நிலைக்கச்செய்வது எதுவோ, அதுவே ஆத்மாவென்று சொல்வது ஸரியாகும். பிராணனை நிலைக்கச்செப்யும் ஜீவனின்றி பிராணனே தன்னை நிலைக்கச்செய்துகொள்வதாகக் கூறுவது ஸரியல்ல. அது சாஸ்திரவிருத்தமாம், ஆதலால் பிராணனைவிட வேருக ஒரு ஆத்மாவை அங்கீகரிக்கவேண்டும். தவிற, என்னுடைய சுவாஸமதிகமாகச் செல்லுகின்றதென்று அனுபவம் ஸகல ஜனங்களுக்கும் எற்படுவதால் பிராணனைவிட வேருக ஆத்மாவொன்று ஸித்திக்கின்றது. அன்றியும் குடம் முதலிய வஸ்துக்கள் கண்ணுக்குப் புலப்படுவதால் பரிச்சின்னமாயும் ஸாவயவமாயுமிருப்பதுபோல் பிராணனுடைய ஸ்பர்சமும் பிரத்தியக்ஷமாய் அறியப்படுவதால் ஸாவ

யவம் என்று ஏற்படுகிறதால் அது ஆத்மாவாக ஒப்பமுடியாது. உலகில் ஸாவயவத்திரவியத்துக்கு உத்பத்திவிநாசங்களுண்டு. அங்ஙனம் பிராணனுக்கும் உத்பத்திவிநாசங்கள் ஸித்தித்துவிட்டால் அது ஆத்மாவாகுமா? ஆத்மா நித்யமென்பது மதவாதிகளனைவரும் ஒப்புக்கொண்ட விஷயமன்றோ? தவிற இச்சரீரத்தின் ஜீவநமரணங்கள் பிராணனுக்குமட்டிலும் அதீனமன்று. இச்சரீரத்தையும் பிராணனையும் நிலைக்கச்செய்வதாகிய ஜீவாத்மாவின் அதீனமேயாம். இக்காரணத்தாலேயே

न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन ।
इतरेण तु जीवन्ति यस्मिन्नेतावुपाश्रितौ ॥

இக்காடகச்சுருதிவாக்கியத்தில் பிராணன் முதலியவற்றை நிலைக்கச்செய்வது ஜீவாத்மாவேயன்றி பிராணாதிகளாலன்று என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்திரியங்களோடு பிராணனுக்கு ஸம்வாதம் ஏற்பட்டதெனச் சொல்லும் சுருதியும் அதன் அபிமானி தேவதாவிஷயமாகத்தான் நயனம் செய்யவேண்டும். ஜடப் பிராணனை விஷயம் செய்வதன்று. ஆகையால் பிராணாத்மவாதிமதமும் அத்யந்தம் அஸங்கதமாம்.

வேறு சிலர் மனதை ஆத்மாவென்பர். பந்தமோக்ஷம் மனதின் அதீனமன்றோ? விஷயத்தில் ஆஸக்தியுள்ள மனம் பந்தத்துக்கும் விஷயாசையை விட்ட மனம் மோக்ஷத்திற்கும் காரணம். மனதின் ஸம்பந்தத்தினாலேயே இந்திரியங்கள் ஞானத்துக்கு ஹேதுவாயிருக்கின்றன. ஸர்வ வ்யவஹாரத்துக்கும் காரணம் மனம்தான், ஆகையால் மனம்தானாத்மாவென்று இவர்களின் அபிப்பிராயம். இச்சார்வாகர்களின் ஸித்தாந்தமும் ஏற்கக்கூடியதல்ல. ஏனெனின் இவர்களை மனதின் பரிமாணமெவ்விதமென வினவவேண்டும். மனம் அணு பரிமாணம் என்றால் இவர்கள் மதத்தில் மனோவடிவாத்மாவின் தர்மங்களாக ஒப்புக்கொள்ளப்படும் ஞானம், இச்சை, ஸுகம், துக்கம் இவை முதலியவை பிரத்தியக்ஷமாக அனுபவிக்கப்படமாட்டா. ஏனெனின் இவ்வுலகில் அதிஸூக்ஷ்மாணுபரிமாணமுள்ள வஸ்துக்களும் அத்தகைய வஸ்து தர்மங்களும் பிரத்யக்ஷமாவதாக அனுபவமில்லை. மஹத்பரிமாணமின்றி ஒரு வஸ்துவை பிரத்தியக்ஷமாய் அறிய முடியாது. ஆகவே மனோவடிவாத்மாவை அணுபரிமாணமாகச்

சொல்ல ஸரிப்படவில்லை. அன்றியும் இவர்கள் மதத்தில் ஆத்மா அணுபரிமாணமானதால் சரீரம் பூராவும் வ்யாபித்திருக்கமுடியாது. யாதானுமோரிடத்திலேயேதானிருக்கவேண்டும். அவ்விதமாயின் ஸர்வசரீரவ்யாபிஸுகதுக்கானுபவம் உண்டாகமுடியாதன்றோ? சந்தனத்தைப் பூசிக்கொண்டவனுக்கு ஸர்வாங்கத்திலும் ஸுகம் எற்படுவது உலகானுபவமல்லவா? இவற்றாலும் ஆத்மா அணுவன்று. கீழ்கண்ட தோஷங்களை விலக்குவதற்காக தேகஸமானபரிமாணமென்றால் ஸரியல்ல. எனெனின் மனேவடிவாத்மா தேஹஸமானமென்றால் மனம் தேஹத்தில் ஸர்வாங்கத்திலும் ஸம்பந்தித்திருப்பதாகச்சொன்னதுபோலல்லவா? அவ்விதமானால் அம்மனதின் ஸம்பந்தம் நேத்திராதி இந்திரியங்களோடு எப்போதுமிருக்குமே, ஆகவே எககாலத்தில் பார்வை, ஞானமும் கேழ்விஞானமுமுண்டாதல் வேண்டுமன்றோ? அவ்விதம் உலகத்தில் ஒரு ஸமயத்தில் இரண்டுஞானம் உதயமாவதில்லையே தவிர, குடம் முதலிய வஸ்து மத்யமபரிமாணமானதால் அநித்யம் என்பது யாவருமறிந்திருக்கலாமானதால் ஆத்மாவையும் அநித்யமாகச் சொல்லும்படி நேரிடுமென்ற தோஷமுமிப்பக்ஷத்திலுண்டு. யோகசாஸ்திரங்கள் மனதையடக்கவேண்டுமென்கின்றன. அடக்கமென்பது ஓரிடத்தில் நிலைநிருத்துவதல்லவா? மனதைக்காட்டிலும் ஆத்மா வேறில்லாவிடின் எந்தவிடத்தில் மனதை நிலைநிறுத்தவேண்டுமென அவை வற்புறுத்தமுடியும்? அதனாலும் மனதைக்காட்டிலும் ஆத்மா வேறென்று ஸித்தித்துவிடலாமே. இவ்விஷயத்தில் விஸ்தரிக்கவேண்டிய விஷயங்களனேகமுண்டு. அவைகளனைத்தும் குருமுகமாயல்லவா அறிந்துகொள்ளவேண்டும்?

மற்றும் சிலர் புத்திரனையே ஆத்மாவாக அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் இப்படிக் கூறுவது ஆச்சரியமன்று. புத்திரனை பகவானாகப் பாவித்துப் பூஜைசெய்யும் தற்காலத்தியவர்கள் ஆத்மாவாக (தானாக) க்கூறுவதில் என்ன ஆச்சர்யமிருக்கிறது? புத்திரனுக்குப் புஷ்டியுண்டானால் தானே புஷ்டியடைந்ததாகவும் புத்திரனுக்கு நஷ்டமேற்பட்டால் தானே நஷ்டப்பட்டுவிட்டதாகவும் நாம் நினைப்பதில்லையா? ஆகவே புத்திரனே ஆத்மாவென்பதும் ஸரியானதே. ஸ்ரீ வித்யாரண்யஸ்வாமிகளும் தற்காலத்தியவர்களை மனதில் வைத்துக்கொண்டுதான் புத்திராத்மவாதிமதம்

ஒன்றிருப்பதாக நிரூபித்திருக்கின்றனர். இதனாலேயே आत्मा वै जायते पुत्रः என்னும் சுருதியிலும் புத்திரனை ஆத்மாவாக ஒப்புக்கொள்வதற்கு யுக்தி கூறப்பட்டிருக்கிறது என்றிவ்வாறு புத்திரனையே ஆத்மாவென்பர் பலர் உளர். இம்மதத்தைக் கண்டிக்க முயற்சிப்பதே பரிஹாஸமாயிருக்குமானாலும் இம்மதத்தையும் சிறிது விசாரிப்போம். புத்திரனை 'ஆத்மாவென்றால் புத்திரனில்லாதவன் ஆத்மாவன்றோ? அவன் ஜடகுடம்போல் அனாத்மாவா? அன்றியும் புத்திரன் இறந்தால் தந்தையும் இறந்துவிடவேண்டும். புத்திராத்மாவும் தகப்பாத்மாவும் ஏகாத்மாவன்றோ? புத்திரனுடைய புஷ்டிநாசங்களைத் தானடைந்ததுபோல் தந்தை பாவனை பண்ணுகிறதால் அவனே தனக்கு ஆத்மாவென்றாகுமா? வேதங்களில் ஆத்மாவை நித்யமென்று கூறியிருக்கிறதல்லவா? புத்திரனுக்கு மரணம் அனுபவஸித்தமன்றோ? ஆகையால் சுருதி, ஸ்மிருதி, யுக்தி இவைகளுக்கு முற்றிலும் இவர்கள் கூறுவது விருத்தமாகும். ஆகவே இவர்களின் மதமும் அஸங்கதம். இதுவரையில் சார்வாகமதமனைத்தும் நிரூபித்துவிட்டோம். இவ்வுலகச் சிற்றின்பத்திலாழ்ந்து மதமென்றும், தெய்வமென்றும் சிறிதும் கவனியாமல் ஸத்குருக்களையடுக்காமலும் சாஸ்திரவிசாரம் செய்ய மனமில்லாமலும் நாமிருப்போமானால் துக்கத்தை எப்படி அனுபவிக்காமலிருக்கமுடியும்? மதங்களுக்குள் நல்லமதம் இன்னதென்றும், கெட்டமதம் இன்னதென்றும் தீர்மானித்துக்கொண்ட பிறகுதான் நல்லமதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்பது ஒருபோதும் முடியாது. யாதாமொருமதத்தை முந்தி அவலம்பித்துவிட்டுப் பிறகு எந்த மதம் நல்லமதம் என விசாரிக்கவேண்டும். இப்படிச்செய்தால் கிரமமாய் நல்லமதஞானமும், முடிவில் மோக்ஷமும், எளிதாக ஸித்தித்துவிடும். இல்லாவிடில் இந்த நாஸ்திகர்களுக்கும் இத்தகையவர்கள் கீழானவர்களேயாவர். ஆகவே குலக்ரமமாய் வந்த மதத்தில் முதலில் நம்பிக்கை வையுங்கள்! மதத்தைவிட்டு விஷயஸுகத்திலீடுபடாதீர்கள், மதத்தில் துவேஷத்தையாவது நிறுத்துங்கள், மதக்கலகத்தை விடுங்கள், மேனாட்டு மதநாகரீகத்தை மறந்துவிடுங்கள். இதுதானுத்தமதர்மம்.

ப-ர்.

# பகவத் ஸ்வரூப நிரூபணம்,

(96-வது பக்கத்தொடர்ச்சி.)

பிரமமான ஸகுணோபாஸநத்தால் மோக்ஷம் எப்படி ஸித்திக்கும் என்று சங்கை. இதற்கு ஸமாதானமிது. ஸம்வாதிபிரமம் என்றும், விஸம்வாதிபிரமம் என்றும் பிரமம் இருவகையானது. இவற்றுள் விஸம்வாதிபிரமத்தால் வாஸ்தவபலனேற்படமுடியாதேயன்றி, ஸம்வாதிபிரமம் வாஸ்தவபலத்தைபுண்டுபண்ணுவது கண்டதுண்டு. அதெப்படியென்றால் வீட்டின் ஓரைக்குள் ஏற்றி வைக்கப்பட்ட தீபத்தின் காந்தி ரத்னம்போல் பிரமிக்கும்படிக்கு வாசற்படியண்டை பிரகாசித்துக்கொண்டிருந்தது. அப்படியே மற்றொரு வீட்டின் ஓரைக்குள்ளிருக்கும் ரத்னப்பிரகாசம் அவ்வீட்டு வாசற்படியண்டை ஜ்வலித்துக்கொண்டிருந்தது. ரத்னம் போற்றோன்றும் தீபகாந்திக்கும் வாஸ்தவரத்னப்ரபைக்கும் சிறிதும் வித்யாஸம் புலப்படவில்லை, இவ்விரு காந்தியையும் இரண்டு புருஷர்கள் வெகுதூரத்திலிருந்தே பார்த்துவிட்டு அவ்விரு ப்ரபையையும் நல்ல ரத்னமெனக் கருதி எடுப்பதற்காக ஓடினார்கள். இவ்விருவர்களுக்குள் தீபப்ரபையை நாடிச்சென்றவனுக்கு ரத்னம் கிடைக்கவில்லை, தீபந்தான் கிடைத்தது. ரத்னப்ரபையை நாடியவனுக்கோ, ரத்னம் கிடைத்தது. தீபப்ரபையில் ரத்னஞானமும் ரத்னப்ரபையில் ரத்னமென்ற ஞானமும் பிரமமன்றோ? பிரமஞானத்தால் உண்மைப்பயனுண்டாகாதென்றால் ரத்னப்ரபையை ரத்னமாக நினைத்த பிராந்திஞானத்தாலும் உண்மையான ரத்னமும் கிடைக்காமலல்லவா இருக்கவேண்டும். இதனால்தான் இதற்கு ஸம்வாதிப்ரமமென்று பெயர் வாய்ந்தது. ஸம்வாதிப்ரமஞானத்தை அங்கீகரிக்கவேண்டாமேயென்றால் அதை அங்கீகரிக்காவிடின் மண், ஸாளக்ராமம், பாணம் தாரு, இவைகளை தேவதைகளாக உபாஸிக்கவேண்டும் என்ற சாஸ்திரங்களனைத்தும் நிஷ்பிரயோஜநமாக முடிந்துவிடும். உண்மையாக இவைகள் தேவதைகளாகுமா? கொடிய பாபியாகிய அஜாமிளன் "நாராயணனை ஸ்மரித்தால் வைகுண்டமுண்டென்று" ஞானமில்லாமலே மரிக்கும்போதும் புத்திரனிடத்திலுள்ள அதிக விசுவாசத்தால் புத்திரனை நாராயணாவென்று கூப்பிட்டதும் வைகுண்டம் சென்றான் என்ற பாகவத

கதையுமிதற்காதாரமாமன்றே? ஆகலால் ஸகுணோபாஸநம் பிரமமானாலும் தோஷமொன்றும் கூறுவதற்கு இடமில்லை. ஆகலால் பகவானுடைய உண்மையுருவத்தை நாம் முதலில் உணரவேண்டும். பகவான் ஸர்வாந்தர்யாமி என்ற பாவனை வேரூன்றவேண்டும். இப்பிரபஞ்சத்தையே பகவானாகவும் பகவானுடைய சரீரமாகவும் கருதவேண்டும். அடிக்கடி பகவன்நாமாவையே உச்சரித்துக்கொண்டிருக்கவேண்டும். இதுதான் நமக்கு க்ஷேமகரம்.

சுபம். V. ஜகதீச்வரசாஸ்திரிகள்,

# ஜீவந்முக்திவிசாரம்.

ஆரியர்களே !

இவ்விஷயத்தில் பலபேர்கள் ஸந்தேகமடைகின்றதால் சாஸ்திரங்களில் கூறும் வண்ணம் ஜீவந்முக்தியைச் சிறிது விசாரிக்கத் துடங்குவாம். இவ்விஷயம் மிகக்கடினமானதால் ஸாவதானமாய் கவனிக்கும்படிக் கோருகிறேன். இதிலிருந்தும் ஸந்தேகம் தெளியாவிட்டால் எனக்கு ஸந்தேகங்களை எழுதியனுப்பினால் தெறிந்தவரையில் மறுமொழி கூறப் பிரயத்னிக்கிறேன்.

மோக்ஷம் என்பது ஞானத்தால்தான் உண்டாகுமென்பது வேதாந்தஸித்தாந்தம். அந்த பிரும்மஞானமும் சிரவணத்தால் ஏற்படவேண்டும், சிரவணமிரண்டுவிதம். ஒன்று வேதாந்த வாக்கியத்துக்கும், சுரோத்திரேந்திரியத்துக்கும் உள்ள ஸம்யோகரூபம், இரண்டாவது வேதாந்த வாக்யார்த்த விசாரரூபம், ஞானத்திற்குக்காரணம் முதல் சிரவணந்தான், இரண்டாவதல்ல. உலகத்தில் சப்தத்தால் ஞானம் யாதாமொன்றுண்டாகவேண்டுமாயின் இந்திரியத்துடன் சப்தத்துக்கு ஸம்பந்தம் வேண்டுமல்லவா? அவ்விதமே வேதாந்தவாக்யத்துக்கும் சுரோத்திரேந்திரியத்துக்கும் உள்ள ஸம்யோகமே பிரும்மஞானத்திற்கும் காரணமென்பது யுக்தந்தான். அவ்வேதாந்தவாக்கியங்களிருவகைத்து; ஒன்று மகாவாக்கியம், மற்றொன்று அவாந்தரவாக்கியம். இவற்றுள் மகாவாக்கியசிரவணம். பிரும்மத்தின் அபரோக்ஷஞானத்துக்கும், அவாந்தரவாக்கியசிரவணம் பரோக்ஷஞானத்துக்கும் ஹேதுவாம்.

ஒருவனுக்கு இப்பிரதமசிரவணத்தால் பிரும்மஞானம் உதயமாயினும் அதில் அஸம்பாவனை விபரீதபாவனைகளுண்டாகுமாதலின் அவைகளை நிவர்த்தித்துக்கொள்வதற்காக இரண்டாவது சிரவணமும் மனன, நிதித்தியாஸநங்களும் ஏற்பட்டுள்ளன. வேதாந்த வாக்கியத்தின் அர்த்தத்தை விசாரிப்பதால் அஸம்பாவனை நிவர்த்தியாகும். அஸம்பாவனை என்றால் ஸம்சயம் என்று பொருள். மனனத்தால் பிரமேயத்தின் அஸம்பாவனை நிவர்த்திக்கும். ஜீவன், பிரும்மம் இவைகளின் அபேதம்தான் பிரமேயமென்பது. நிதித்தியாஸநத்தால் விபரீதபாவனை நிவர்த்திக்கும். இந்த நிதித்தியாஸனத்தின் பரிபாகத்தை ஸமாதிநிலையென்றும், ஜீவன்முக்தியென்றும் சொல்வதுண்டு. இவ்வவஸ்தையில்தான் "நானே பிரும்மம், பிரும்மமே நான்" என்ற அபேதஞானம் திருடப்படும். இவ்விதம் திருடஞானம் எவனுக்காவது உண்டாகுமாயின் அவனுக்கு ஜீவந்முக்தி கிடைக்கும். இந்தஞானம், அவித்யையையும் அதின்காரியங்களையும் நாசம்பண்ணித்தானும் முடிவில் நிவர்த்தியாய்விடுகிறது. மீண்டுமுத்பத்தியடைவதில்லை. ஆகவே பிரும்மஞானத்தால் எவனுக்கு கர்த்ருத்வம் முதலிய பந்தங்கள் ஜீவித்துக்கொண்டிருக்கும்போதே நிவர்த்திக்குமோ, அவனே ஜீவன்முக்தனும். எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஒரு தேகத்தையும் தானடையாமல் அகண்டைகாஸபிரும்மமாத்திரமாயிருப்பது விதேகமுக்தி எனப்படும். இவ்விருவித முக்தியையடையவேண்டியே சுருதிகள் பிரவர்த்தித்திருகின்றன. முக்தியடைந்தவனை தத்துவஞானி என்றும், குணாதீதனென்றும் அறிஞர்கள் கூறுவார்கள். இனி ஜீவன்முக்தனை ஞானி என்ற பதத்தாலேயே வ்யவஹரிப்போம். ஞானிகளுக்குச் சரீரமிருப்பினும் அதில் அபிமானமற்றுவிடும். ஏனெனின் சரீராபிமானத்துக்குக் காரணமான அக்ஞானமற்றுவிட்டதல்லவா ? அப்படியானால் ஞானிகளின் வியவஹாரத்துக்குக் காரணம் என்னவெனின் ஞானிகளின் வியவஹாரத்துக்கு அஞானிகளின் வ்யவஹாரத்துக்குபோல் அக்ஞானமும், அதினுலுண்டான ராகத்வேஷங்களும் காரணமில்லை. மற்று யாதெனின், பிராரப்தகர்மசேஷமே காரணமென்றுணரவேண்டும். ஞானத்தால் ஸஞ்சிதம், ஆகாமி, கர்மங்கள் நசித்தாலும் பிராரப்தம் நசிப்பதில்லை. ஞானத்தைக்காட்டிலும்பிராரப்தகர்மத்துக்குத்தானதிக

பலம். ஞானியாயிருப்பவனுக்குப்ராரப்தகர்மசேஷத்தால் உலகவிய
வஹாரமும்ஸம்பவிக்கும். ஆனல் அப்ப்ராரப்தகர்மம்நானுவிதமா
னது. ஆகவேஞானிகளின்வியவஹாரமும்நானுவிதமாகத்தானிருக்
கும். ப்ராரப்தகர்மவசமாகஞானிக்குவியவஹாரமேற்படுவதால்
அவனைஞானியல்லவென்றுசங்கைசெய்யலாகாது. வாஸிஷ்டக்ரந்
தத்தில் அனேக ஞானிகளுக்கு வியவஹாரமும் நானுவிதமாயுண்
டெனச் சொல்லியிருக்கின்றது. ஜனகருக்கு இராஜ்யபரிபா
லன வியவகாரமும், ஸ்ரீ யாக்ஞவல்க்யருக்கு மஹரிஷிகளை ஸபை
யில் ஜயித்து தனஸங்கிரஹ வியவஹாரமும், இருந்ததாக சுருதி
ப்ரஸித்தமன்றோ ! இப்படி விலக்ஷண வ்யவஹாரம் ஞானிகளுக்
கிருந்தாலும் ஞானமோ, மோக்ஷமோ இவை இல்லையென மறுத்
தல் தகாது. ஜீவன் முக்தர்களுக்கு நானுவித வியவாஹாரமுண்
டென்ருல் இவர்களுக்கும், அக்ஞானிகளுக்கும், விசேஷம் என்ன
வெனின் ஞானமிவர்களினிடமிருப்பதே பெரிய விசேஷமே.
இவர்களுடைய இயல்பாலும், நடத்தையாலும், விசேஷம் புலப்
படும். இவர்களின் லக்ஷணத்தை விரிவாய் வாஸிஷ்டத்திலும்,
ஸ்ரீ பகவத்கீதையிலும், காணலாம். அக்ஞானிகள் அபிமான
புரஸ்ஸரம் வியவஹரிப்பார்கள். ஞானிகளுக்கு அப்படியில்லை என்
றும் விசேஷமுண்டு. ஞானிகளுக்கு உலக வியவஹாரமிருந்தா
லும் மனம் மட்டிலும் ப்ரம்மத்தையே நாடிநிற்கும். தாளம் முத
லிய ஸாமக்கிரிகளோடு பாடிக்கொண்டு பிச்சைபுகும் தாஸிக்கு
தலைமீது இருக்கும் குடத்தில் முக்கிய நோக்கமிருப்பதுபோல்
உலக வியவஹாரத்துடன் ஞானிகளிருந்தாலும் ப்ரும்மத்தைத்
தியானிப்பதிலேயேதான் நோக்கமிருக்கும். இதையனுஸரித்
துத்தான்.

पुंखानुपुंखविषयेक्षणतत्परोऽपि ब्रह्मावलोकनधियं न जहाति योगी ।
सङ्गीतकाललयवाद्यवशङ्गतापि मौलिस्थकुम्भपरिरक्षणधीर्नटीव ॥

என்று இந்த சுலோகத்தை பெரியோர்கள் சொல்வார்கள். தவிர
ஆத்மாவுக்கும், தேகாதிகளுக்கும் ஸம்பந்தமில்லைஎன்னும் ஞானத்
துடன் ஸகல வியவஹாரங்களையும் ஞானி செய்கின்றனன். இக்
காரணத்தால் ஞானியினுடைய ப்ரவர்த்தியும் நிவர்த்தியென்றே
தான் சொல்லவேண்டும். இதனுல் ஜீவன் முக்தர்கள் ப்ரபஞ்சவிய

வ்ஹாரங்களுடையவர்களாக அன்னியர்களுக்கு தோற்றினும் அவர்கள் ஆத்மாவை அஸங்கமென அறிந்து பிராரப்த கர்மவசமாக பிரபஞ்ச வியவஹாரங்களைச் செய்தலால் மீண்டும் ஜன்மமரண சம்ஸாரபந்தத்தையனுபவிபார்கள். ஜன்மமரணங்களுக்குக் காரணமான அவித்யை, காம, கர்மங்கள்யாவும் ஞானத்தாலொழிந்துவிட்டதால் முக்தியையடைந்து ஆனந்தம் பெறுவார்கள். அன்றியும் இந்த ரகஸ்யம் அறியவேண்டியது. ஞானிகளுக்கு உண்டாகும் உலக வியவஹாரம் அவர்களின் ஜீவன்முக்திக்கு விரோதமில்லை. ஆனால் அவ்வியவஹாரம் ஜீவன்முக்திஸுகத்திற்குவிரோதியாகும்.. எப்படியென்றால் ஆத்மா நித்யமுக்தமென்பது வேதாந்தங்களின் ஸித்தாந்தம். அது இவ்வுலகத்திலும் வியாபகமுள்ளது. உண்மையானதும் ஆகவே அவ்வாத்மாவின்கண் உலகமனைத்தும் அவித்யையால் கல்பிதமென்று எற்படுகின்றது. மூன்று காலத்திலுமுள்ளதே உண்மை வஸ்துவாகும். அவ்விதம்ஒன்றுதானிருக்கமுடியும். அவ்வுண்மை வஸ்து ஞானம் எப்போதுண்டாகுமோ அப்போது அவித்யையும், அதனால் எற்பட்ட பந்தப்பிராந்தியும் நஷ்டமாய்விடும். இச்சரீரம் இருக்கும்போதே பந்தங்களனைத்தும் நஷ்டமாய் விடுவதே ஜீவன் முக்தி எனப்படும். ஆகையால் ஞானிகளின் சரீரம் உலக வியவஹாரத்தைச் செய்வதால் சரீராபிமானமற்ற ஆத்மநிஷ்டர்களான அவர்களுக்கு முக்தியில்லை எனக் கூறமுடியாது ஆனால் உலக வியவாஹாரத்தால் ஜீவன்முக்திஸுகத்தை அனுபவிக்க முடியாது. எனெனின் உலக வியவஹாரத்தால் அந்தஃகரணம் எகாக்ரத்தன்மையடையாதல்லவா? அங்ஙனமாயின் அந்த ஜீவன்முக்திஸுகத்தையனுபவிப்பதற்காக மனதை அடக்கி எகாக்ரப்படுத்திக்கொள்ளவேண்டும். தத்வ ஞானியாயிருந்தாலும் மனோநாசம், வாஸனாக்ஷயம் இவைகளையடையாமலிருந்தால் ஜீவன்முக்தியில் ஸந்தேகமில்லையானாலும் ஜீவன்முக்திஸுகம் எற்படமாட்டாது என்று வாசிஷ்டம் முதலிய ஞானநூல்களிலும் பிரஸித்தம். ஆகவே அனேக ஞானிகளுக்கு வியவஹாரங்களையும் அனேகவிதமாய் அக்கிரந்தங்களில் சொல்லியிருக்கின்றன. இன்னவிதமாகத்தான் ஞானிகள் வியவஹரிப்பார்கள் என்று நிர்ணயிக்க முடியவே முடியாது. துஷ்டக்காரியங்களையும் சிலர் அனுஷ்டித்துக் கொண்டிருப்பார்கள். எனெனின் ஸஞ்சிதம், ஆகாமி, பிராரப்தம், என்ற மூன்றுவகை கர்மங்

களுக்குள் ஞானியின் சரீரத்தை யுத்பத்தி செய்த பிராரப்தகர்மம் தான் சரீரஸ்திதிக்கு ஹேதுவாகும். உலக வியவஹாரத்திலும் பிரவர்த்திக்கச் செய்யும். பிராரப்தம் அனுபவியாமல் நசித்து விடாது. ஆகவே அதன் மூலமாகக்கெட்டகாரியங்களுமேற்படலாம். இதற்குப் பிரமாண வசனங்களை எழுதும் பக்ஷத்தில் அதனாலேயே இப்பத்திரிகையைப் பூர்த்தி செய்துவிடலாம். ஆகலால் ஞானிகளுக்கும் கெட்டகாரியங்களில் பிரவர்த்தி ஸம்பவிக்கும் என்பது நிச்சயம். அவ்விதம் அனேக ஞானிகளும் இருந்திருப்பதாகப் புராணமூலமாகப் புலப்படுகின்றது. பிராரப்தகர்மம் இவ்விதமிருக்குமென்று யார் உணருவார்கள்? இங்கு ஒரு சங்கை உண்டாகலாம். ஒரு பிராரப்தகர்மம் அனேக சரீரங்களை ஆரம்பிக்குமேயாகில் முதல் சரீரத்தில் ஞானமுண்டாகும் பக்ஷத்தில் அந்த ஞானிக்கு வேறொரு சரீரப் பிராப்தியுமுண்டாதல் வேண்டுமே? ஏனென்றால் பலத்தைக்கொடுப்பதற்கு ஆரம்பித்த கர்மம் பிராரப்தமெனப்படுமல்லவா? பிரதமசரீரத்தில் ஞானமுண்டானாலும் அக்கர்மத்தின் பயனாகிய அந்நிய சரீரமும் சேஷித்துநிற்குமல்லவா? ஆகவே பிராரப்தகர்ம பலனாக அனேக சரீரங்கள் ஞானிக்கும் ஸம்பவிக்கும் என்று சங்கை ஏற்படும். அதுகூடாது அனேக சரீராரம்பகமாக பிராரப்தம எவனுக்கு உண்டோ அவனுக்கு பிரதம சரீரத்தில் ஞானமே உண்டாகாது. ஏனெனில் ஞானத்துக்கு அத்தகைய பிராரப்த கர்மம் பிரதிபந்தகமாம். வாமதேவர் பூர்வஜன்மத்தில் சிரவணாதிகள் செய்திருந்தும் பிராரப்தகர்மவசமாக சரீரசேஷமிருந்ததால் ஞானத்தை அடையவில்லையென்றும் வர்த்தமான சரீரம் விழுந்தும் முன்ஜன்மத்தில் செய்த சிரவணாதிகளால் கர்ப்பத்திலேயே ஞானத்தையடைந்ததாகவும் சுருதிகள் பறையறைகின்றன. ஆதலால் ஞானத்திற்குப் பிறகு வேறு சரீரஸம்பந்தமுண்டாகாது. அன்றியும் ஞானியின் பிராணன் அக்ஞானிக்குப் போல் வெளியிற் செல்வதில்லை. பின்னையோவெனின் பிரம்மத்தினிடத்தில் இந்திரியங்களுடன்கூட பிராணன் லயித்துவிடும் என்று உபநிஷத்துக்கள் உரைக்கின்றன. பிராணனில்லாமல் அன்யசரீர ஸம்பந்தம் ஞானிக்கு சரிப்படாது. தவிர ஞானிகளுக்கு தனது சரீரத்தை விடுவதால் காலதேசங்களை அபேக்ஷையில்லை. உத்தராயணத்திலோ தக்ஷிணாயனத்திலோ காசி முதலிய புண்யக்ஷேத்திரத்திலோ, பறைச்சேரியிலோ, ஞானிக

ளின் சரீரம் விழுமாயின் தோஷங்களொன்றும் அவர்களுக்கு ஸம்பவியா. ரோகத்தால் புலம்பிக்கொண்டு இறந்தாலும் முக்தர்களே யாவர். உபாஸகர்களுக்கு சாஸ்திரங்களில் காலதேசாதிகளிலபேக்ஷை யுண்டென கூறப்பட்டிருக்கின்றது. இங்குஒரு சங்கை செய்வது வழக்கம். அதாவது பீஷ்மர் மஹாஞானியாயிருந்தாலும் உத்தராயணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்ததாக பாரதத்தில் பிரஸித்தம். ஆகவே ஞானிகளுக்கு சரீரத்யாகத்தில் காலதேசாதிகளில் அபேக்ஷையில்லை என்று எப்படிக்கூறுவது என்று. இதுஸரியல்ல. பீஷ்மாதிகள் ஆதிகாரிகபுருஷர்களென்று பாரதத்திலேயே பிரஸித்தம். அவர் உபாஸகர்களுக்கு உபதேசிப்பதற்காகவே காலநியமத்தை அபேக்ஷித்தனரேயன்றி தனக்காகவல்ல. அதிகாரி புருஷர்களாக இருக்கும் ஞானிகளுக்கும் கேவலஞானிகளுக்கும் பேதமுண்டு. வஸிஷ்டர், முதலிய மஹரிஷிகளும் இந்திரன், யமன், முதலிய தேவர்களும் அதிகாரி புருஷர்களே யாவர். அவ்வதிகாரி புருஷர்களுக்கு அவ்வதிகாரமிருக்குமளவு அதாவது கல்பபரியந்தம் பிராரப்தமிருக்கும். அதன் காரிய ஜன்மங்களுமுண்டு. இக்கல்பம் முடியும்போதுதான் அவர்களுக்கு விதேக மோக்ஷம் ஏற்படும். இக்கற்பத்தினிடையில் இவர்கள் தன்னிச்சையாலும் அனேக ஜன்மங்களை அடைவார்கள் அவ்விதம் அனேக ஜன்மங்களை அடைந்தாலும் இவர்கள்ஜீவன் முக்தர்களே. இவ்வதிகாரி புருஷர்களின் உலக வியவஹாரங்களெல்லாம் இதர ஜனங்களுக்கு உபதேசிப்பதற்காகத்தான். இதுதான் ஞானிகளுக்கும் இவர்களுக்கும் உள்ள வித்யாஸம். பாக்கி அம்சங்கள் ஸமானங்களே. இவற்றால் ஜீவன்முக்தியென்பது சாஸ்திர ஸித்தமானதால் இல்லை என்று கூறுவது அறியாமையாலேயே என்று நாம் நம்பவேண்டும். ஜீவன்முக்தி இல்லையென மறுப்பவர்கள் எந்தப் பிரயோஜனத்தை உத்தேசித்து சிரவணாதிகளில் முமுக்ஷு பிரவர்த்திக்க வேண்டுமென சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. விதேகமுக்திக்கோவென்றால் சிரவணாதிகளால் ஞானம் உதயமானதும் ஞானியின் சரீரமும் விழுந்துவிடவேண்டும். அப்படிக்காணவில்லை. தவிர சிஷ்யர்களை பவஸாகரத்தினின்றும்கரையேற்றுவதற்காகவும் ஜீவன்முக்தியை அங்கீகரிக்கவேண்டும். விதேஹ முக்தனுக்கு சரீரமில்லையாதலின் அவன் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்யமுடியாது. ஜீவன்முக்தியுமில்லை

என்றால் எவ்வித முக்தியையுமொருவருமடைய முடியாது. முக்தனுடைய உபதேசந்தான் சிஷ்யர்களுக்கு முக்தியை அளிக்கும். பத்தன் "தன்னையே ரக்ஷித்துக்கொள்ள முடியாதவன் பிறரை எப்படி ரக்ஷிப்பான்" என்ற நியாயம்போல் தானே பந்தத்தினின்றும் விடுபடாமலிருக்கும்போது பிறரை எப்படி பந்தத்தினின்றும் விடுவிக்க சக்தியையடைவான். இதனாலும் ஜீவன் முக்தியையவசியம் ஒப்பவேண்டும். ஆனால் சிலக்ரந்தங்களில் "ஸத்யோமுக்தி" என்ற பக்ஷம் ஒன்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த பக்ஷம் உத்தமாதிகாரிகளுக்காகவேயன்றி மந்த மத்யமாதிகாரிகளுக்காக அல்லவென்பது அக்கிரந்தங்களைப் பரிசீலனம் பண்ணினவர்களுக்குப்புலப்படும். தவிர அப்பக்ஷத்தை அங்கீகரிப்பவர்களும் ஜீவன் முக்தியைக்கண்டிக்கவில்லை. திருஷ்டி ஸ்ருஷ்டிவாதத்தைஅவலம்பித்துஇவ்வுலகமெல்லாம் ஸ்வப்னத்துக்கு ஸமானம் இப்பிரபஞ்சத்துக்கு வ்யாவஹாரிகஸத்தையுமில்லை என்றும், ஜீவன் முக்தியும் ஸ்வப்நம்போன்றதென்றுந்தானிவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். ஆகையால் ஜீவன முக்தியில்லை என்னும் சொல் பிரமாணமன்றும். இன்னுமிவ்விஷயத்தில் விசாரிக்க வேண்டிய விஷயங்கள் பல உள. ஆயினும் அவைகளை ஒரே வாரத்தில் வெளியிட்டால் அதின் உண்மையை எளிதில் அறியமுடியாதாகையால் கொஞ்சம் கொஞ்சமாக விசாரித்து நிர்ணயித்துக்கொள்வதுதான் உசிதமென்று ஸங்கிரஹமாய் இதுகாறும் இவ்விஷயத்தை நிரூபித்தோம். இதிலுள்ள வேறு விசேஷங்களை அடுத்த வாரத்தில் வெளியிடுவாம். சுபம்!

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்.

---

## ஆர்யதர்மம் சந்தாநேயர்களுக்கு விக்ஞாபனம்.

நமது ஆர்யதர்மம் சந்தாநேயர்களில் சிலர் அந்தந்த விஷயங்களுக்குப் பிரமாணமாய் எடுத்துக்காட்டும்வசனங்களைநாகரத்திலும் கிரந்தத்திலும் போடவேணுமென்று கருதுகிறார்கள். அது ரட்டிப்பு பங்காக இடத்தை அடைத்து விடுவதால் நாகரலிபியிலொன்றில் மட்டும் போடுவதாக அவர்களிடம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆகையால் இதையே யாவரும் ஆதரிக்கும்படிக்கேட்டுக் கொள்ளுகிறோம்.